தினமலர்
சென்னை CHENNAI ■ சனிக்கிழமை செப்டம்பர் 30 2023

# அண்ணா பல்கலை கூடைப்பந்து செயின்ட் ஜோசப் அணி சாம்பியன்

**சென்னை, செப். 30–**
அண்ணா பல்கலைக்கு உட்பட்ட கல்லூரிகள், பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, மூன்றாவது மண்டலத்திற்கான போட்டிகள், ராமாபுரத்தில் உள்ள எஸ்.ஆர்.எம்., ஈஸ்வரி கல்லூரி வளாகத்தில், நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

ஆடவருக்கான கூடைப் பந்து போட்டியில், 15க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன. காலிறுதியில், செம்மஞ்சேரி செயின்ட் ஜோசப் அணி, 49 – 12 என்ற கணக்கில், முகமது சதக் அணியை வீழ்த்தியது.

தொடர்ந்து நடந்த அரையிறுதியில், செயின்ட் ஜோசப், எஸ்.ஆர்.எம்., ஈஸ்வரி அணிகள் மோதின. அதில், 66 – 22 என்ற அபார புள்ளிக்கணக்கில் எஸ்.ஆர்.எம்., அணியை தோற்கடித்து, செயின்ட் ஜோசப் வெற்றி பெற்றது.

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில், எஸ்.எஸ்.என்., பொறியியல் கல்லூரியை 64 – 40 என்ற கணக்கில் தோற்கடித்த, செயின்ட் ஜோசப் அணி, சாம்பியன் கோப்பையை தட்டிச் சென்றது.

30.09.23